# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## *2010 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க, மாளிகாவத்தை ஜனாஸா மற்றும் நலன்புரிச் சங்கம் (கூட்டிணைத்தல்) சட்டம்*

---

*(2010 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 09 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

---

*2010, பெப்புருவரி மாதம் 12 ஆந் தேதிய* ***இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்*** II *ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது*

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது*

*கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்*

***விலை : ரூபா 11.00*** ***தபாற் செலவு : ரூபா 5.00***

## 2010 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க, மாளிகாவத்தை ஜனாஸா மற்றும் நலன்புரிச் சங்கம் (கூட்டிணைத்தல்) சட்டம்

[2010 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 09 ஆம் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது.]

ச.வ. ஓ. (கூட்.) 12/2007

### மாளிகாவத்தை ஜனாஸா மற்றும் நலன்புரிச் சங்கத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்

முன்னுரை.

"மாளிகாவத்தை ஜனாஸா மற்றும் நலன்புரிச் சங்கம்" என அழைக்கப்படுவதும் அறியப்படுவதுமான சங்கம் ஒன்று அதன் உறுப்பினர்களால் இணங்கிக்கொள்ளப்பட்ட விதிகளுக்கிணங்கச் சொல்லப்பட்ட சங்கத்துடன் தொடர்புபட்ட எல்லாக் குறிக்கோள் களையும் கருமங்களையும் பயனுற நிறைவேற்றிக் கொண்டு நடாத்தும் நோக்கத்துக்காக இதற்கு முன்னர் கொழும்பில் தாபிக்கப்பட்டுள்ளதாதலாலும் :

அத்துடன், சொல்லப்பட்ட சங்கம் எப்பல்வேறு குறிக்கோள்க ளுக்காகவும், கருமங்களுக்காகவும் உருவாக்கப்பட்டதோ அப்பல்வேறு குறிக்கோள்களையும், கருமங்களையும் இதுவரை வெற்றிகரமாக நிறைவேற்றியும் கொண்டுநடாத்தியும் வந்துள்ள தாதலாலும், அது கூட்டிணைக்கப்பட விண்ணப்பித்துள்ளதாத லாலும் அவ்விண்ணப்பத்தை அனுமதித்தல் பொதுமக்கள் நன்மைக்கானதாகவிருக்குமாதலாலும் :

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத் தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :

சுருக்கப் பெயர்.

**1.** இச்சட்டம், 2010 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க, "மாளிகாவத்தை ஜனாஸா மற்றும் நலன்புரிச் சங்கம் (கூட்டிணைத்தல்) சட்டம்" என எடுத்துக்காட்டப்படலாம்.

மாளிகாவத்தை ஜனாஸா மற்றும் நலன்புரிச் சங்கத்தைக் கூட்டிணைத்தல்.

**2.** இச்சட்டம் தொடங்கும் திகதியிலிருந்தும் அதன் பின்னரும் (இதனகத்துப்பின்னர் "சங்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) "மாளிகாவத்தை ஜனாஸா மற்றும் நலன்புரிச் சங்கத்தின்" தற்போதைய உறுப்பினர்களாக உள்ளவர்களும் இத்தால் அமைத்துருவாக்கப்படும் கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களாக இனிமேல் சேர்த்துக் கொள்ளப்படுபவர்களுமான அத்தகையோரான அத்தனை ஆட்களும் (இதனகத்துப்பின்னர் "கூட்டுத் தாபனம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) "மாளிகாவத்தை

ஜனாஸா மற்றும் நலன்புரிச் சங்கம்" என்ற பெயர் மகுடத்தின்கீழ் இடையறாவழியுரிமை கொண்ட ஒரு கூட்டிணைக்கப்பட்ட குழுவாகவிருத்தல் வேண்டும் என்பதுடன், அது அப்பெயர் கொண்டு வழக்குத் தொடுக்கலாமென்பதுடன் அதற்கெதிராக வழக்குத் தொடுக்கவும்படலாம். அத்துடன் பொது இலச்சினை யொன்றை வைத்திருக்கவும், பயன்படுத்தவும் விரும்பியாங்கு அதை மாற்றவும் அது முழுத்தத்துவமும், அதிகாரமும் கொண்ட தாயிருத்தலும் வேண்டும்.

*கூட்டுத்தாபனத்தின் பொதுக் குறிக்கோள்கள்.*

**3.** கூட்டுத்தாபனம் அமைத்துருவாக்கப்படுவதற்கான பொதுக் குறிக்கோள்கள் பின்வருவனவாதல் வேண்டும் என இத்தால் வெளிப்படுத்தப்படுகின்றது :-

(அ) உறுப்பினர் ஒருவர் இறக்கும் பட்டசத்தில் ஜனாஸா செலவுகளை ஈடுசெய்வதற்கு அத்தகைய உறுப்பினரால் பெயர் குறித்து நியமிக்கப்பட்ட பயனுகரிகளுக்கு நிதியுதவி வழங்குதல் ;

(ஆ) உறுப்பாண்மையிடையே சிக்கனத்தை ஊக்குவித்தல் ;

(இ) மாளிகாவத்தை முஸ்லிம் சமுதாயத்தின் நலம்பேணு தலுக்கு உதவுதொகைகள் வழங்குதல் ;

(ஈ) அரசாங்க வைத்தியசாலைகளில் உரிமை கோரப்படா திருக்கும் முஸ்லிம்களின் ஜனாஸாக்களை நல்லடக்கம் செய்தல் ;

(உ) சமுதாயங்களிடையே நல்லிணக்கத்தைப் பேணிக்காத்தல்;

(ஊ) முஸ்லிம்களிடையே இஸ்லாத்தின் நடைமுறை அனுஷ்டானத்தை ஊக்குவித்தல் ; அத்துடன்

(எ) கல்வி, சமுகமேம்பாடு, கூட்டுறவுத் தொழில் முயற்சி, சுகாதாரம் மற்றும் வாழ்வாதார நிகழ்ச்சித் திட்டங்கள் என்பவற்றுக்குக் கவனம் செலுத்தி முஸ்லிம் சமுதாயத் திற்கு நிகழ்ச்சித் திட்டங்களை ஒழுங்கு செய்தல்.

கூட்டுத்தாபனத்தின் பொதுத் தத்துவங்கள்.

*4*. இச்சட்டத்தினதும் எழுத்திலான வேறேதேனும் சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கமைய கூட்டுத்தாபனம் பின்வருவன வற்றிற்கான தத்துவத்தைக் கொண்டிருத்தல் வேண்டும் :-

(அ) கூட்டுத்தாபனத்தின் நோக்கங்களுக்காகத் தேவைப் படும் காணிகளை அல்லது கட்டிடங்களைக் கொள்வனவு செய்வதற்கும், கொள்வதற்கும், வாடகைக்கு எடுப்பதற்கும் நிர்மாணிப்பதற்கும் அத்துடன் வேறுவகையில் பெறவும் ;

(ஆ) கூட்டுத்தாபனத்தின் நோக்கங்களுக்குப் பணத்தைக் கடனெடுப்பதற்கு அல்லது திரட்டுவதற்கு ;

(இ) செலாவணி உண்டியல் பத்திரங்கள், காசோலைகள், வாக்குறுதிப் பத்திரங்கள் அத்துடன் ஏனைய கைமாற்றம் செய்யக்கூடிய சாதனங்களைத் தயாரிக்கவும், வரையவும், கையேற்கவும், கழிவு வழங்கவும், கைமாற்றம் செய்யவும், வழங்கவும், வங்கிக் கணக்குகளைத் திறக்கவும், செயற்படுத்தவும், பேணவும் முடிவுறுத்தவும் ;

(ஈ) கூட்டுத்தாபனத்தின் நோக்கத்திற்காக உடனடியாகத் தேவைப்படாத ஏதேனும் நிதிகளை சபை பொருத்தமெனக் கருதும் அத்தகைய முறையில் முதலீடு செய்வதற்கும் ;

(உ) ஒப்பப்பணங்கள், மானியக் கொடைகள், கொடைகள் மற்றும் எல்லா வகையிலுமான நன்கொடைகளைக் பரிந்து கேட்கவும் கையேற்கவும் ;

(ஊ) எவரேனும் ஆளுடன் அல்லது ஆட்கள் குழுவுடன் உடன்படிக்கைகளை அல்லது ஒப்பந்தங்களைச் செய்யவும் ;

(எ) கூட்டுத்தாபனத்தின் அலுவலர்களையும், சேவையாளர்களையும் நியமனஞ்செய்யவும், சேவையில் ஈடுபடுத்தவும், பதவிநீக்கஞ்செய்யவும், அவர்களின் சேவையை

முடிவுறுத்தவும், கூட்டுத்தாபனத்தால் தீர்மானிக்கப் படக்கூடியவாறான சம்பளங்கள், படிகள், பணிக் கொடைகள் என்பவற்றைக் கொடுப்பனவு செய்யவும் ;

(ஏ) கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை நிறைவேற்று வதற்கு உபகுழுக்களை நியமித்தல் ; அத்துடன்

(ஐ) கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை நிறைவேற்று வதற்கு அவசியமாகின்றவாறான அல்லது உசிதமா கின்றவாறான அத்தகைய எல்லாச் செயல்களையும் விடயங்களையும் புரிதல்.

கூட்டுத்தாபனத்தின் அலுவல்களை முகாமை செய்தல்.

**5**. (1) கூட்டுத்தாபனத்தினுடைய அலுவல்களின் நிர்வாகமும் முகாமைத்துவமும் இச்சட்டத்தினதும் 7 ஆம் பிரிவின்கீழ் ஆக்கப் பட்ட கூட்டுத்தாபனத்தின் விதிகளினதும் ஏற்பாடுகளுக்கமைய தலைவர், ஒரு துணைத்தலைவர், பொதுச் செயலாளர், துணைச் செயலாளர், பொருளாளர், துணைப்பொருளாளர் ஆகியோரை யும் அத்தகைய விதிகளில் ஏற்பாடு செய்யப்பட்டவாறு அதற் கிணங்க தெரிவு செய்யப்பட்ட வேறு ஐந்து குழு உறுப்பினர் களையும் கொண்ட முகாமைச்சபையினால் நிர்வகிக்கப்படல் வேண்டும்.

(2) எவரேனும் பதவி தாங்குநர் பதவி துறத்தல், அகற்றப்படுதல் அல்லது அவரது இறப்புக் காரணமாக ஏதேனும் வெற்றிடம் எழும் பட்சத்தில் அத்தகைய வெற்றிடம் கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்கிணங்க நிரப்பப்படுதல் வேண்டும்.

(3) கூட்டுத்தாபனத்தின் முதலாவது சபை இச்சட்டம் தொடங் கும் நாளுக்கு முந்திய நாளன்று பதவி வகிக்கும் சங்கத்தின் குழு உறுப்பினர்களைக் கொண்டிருத்தல் வேண்டும்.

நம்பிக்கைப் பொறுப்பாளர் சபை.

**6**. (1) கூட்டுத்தாபனம் எல்லாக் கடந்த காலத் தலைவர்களை யும் செயலாளர்களையும் சங்கத்தின் செயற்பாடுகளில் தற்போது ஈடுபட்டுள்ள தாபக உறுப்பினர்களையும் கொண்ட நம்பிக்கைப் பொறுப்பாளர் சபையொன்றைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(2) ஐந்தாம் பிரிவின்கீழ் நியமிக்கப்பட்ட தலைவர்களும் பொதுச் செயலாளர்களும் பொருளாளரும் நம்பிக்கைப் பொறுப்பாளர் சபையின் பதவிவழி உறுப்பினர்களாதல் வேண்டும்.

*கூட்டுத்தாபனத்தின் விதிகள்.*

**7.** (1) ஏதேனும் பொதுக்கூட்டத்திலும் சமுகமாயிருந்து வாக்களிக்கும் உறுப்பினர்களின் மூன்றில் இரண்டிற்குக் குறையாத வாக்குப் பெரும்பான்மை கொண்டு பின்வரும் கருமங்கள் எல்லாவற்றுக்கும் அல்லது எவற்றுக்கும் இச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் ஒவ்வாதனவாகவிராத விதிகளைக் காலத்துக்குக் காலம் ஆக்குதல் கூட்டுத்தாபனத்துக்குச் சட்டமுறையானதாதல் வேண்டும் :-

(அ) உறுப்பாண்மையை வகுப்பாக்கம் செய்தல் அத்துடன் உறுப்பினர்களைச் சேர்த்தல், அவர்கள் பதவி விலகல், அவர்களை விலக்குதல் ;

(ஆ) பதவிதாங்குநர்களைத் தெரிவு செய்தல், அவர்கள் பதவி துறத்தல், பதவியை வறிதாக்கல் அல்லது பதவியிலிருந்து அகற்றப்படுதல் ;

(இ) கூட்டுத்தாபனத்தின் பதவி தாங்குநர்கள், முகவர்கள், அலுவலர்கள், சேவையாளர்கள் என்போரின் தத்துவங்களும், நடத்தையும், கடமைகளும், பணிகளும் ;

(ஈ) கூட்டுத்தாபனத்தினதும் ஏதேனும் உப குழுவினதும் கூட்டங்களில் அனுசரிக்கப்பட வேண்டிய நடவடிக்கை முறைகள், அத்தகைய கூட்டங்களின் நேரங்களும், இடங்களும், அறிவித்தல்களும், நிகழ்ச்சி நிரலும், அதற்கான கூட்ட நடப்பெண்ணும் அதில் அலுவல்களை நடாத்துதலும் ;

(உ) கூட்டுத்தாபனத்தின் ஆதனத்தை நிருவகித்தலும் முகாமை செய்தலும் அதன் நிதியங்களின் கட்டுக்காப்பும்; அத்துடன்

(ஊ) பொதுவாகக் கூட்டுத்தாபனத்தின் அலுவல்களை முகாமை செய்தலும், அதன் குறிக்கோள்களை எய்துதலும்.

(2) கூட்டுத்தாபனத்தின் விதி எதுவும் (1) ஆம் உட்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட விதியொன்று என்றாற்போன்று அதேபோன்ற கூட்டத்திலும் அதேபோன்ற முறையிலும் திருத்தப்படலாம், மாற்றப்படலாம் அதற்கெதுவும் சேர்க்கப்படலாம் அல்லது இல்லாதொழிக்கப்படலாம்.

(3) கூட்டுத்தாபனததின் உறுப்பினர்கள் அனைவரும் கூட்டுத் தாபனத்தின் விதிகளுக்கமைந்தோராதல் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் நிதியம்.

**8.** (1) கூட்டுத்தாபனம் அதன் சொந்த நிதியத்தைக் கொண்டிருத்தல் வேண்டும் என்பதுடன் கொடை, அன்பளிப்பு, நன்கொடை, ஒப்பப்பணம், உதவுதொகை, இறுதிவிருப்பாவணக் கையளிப்பு அல்லது கட்டணங்களாக அல்லது மானியங்களாகக் கிடைக்கக்கூடிய எல்லாப் பணங்களும் குழு தீர்மானிக்கும் ஒரு வங்கியில் அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட வங்கிகளில் கூட்டுத்தாபனத்தின் வரவுக்கு வைப்பிலிடப்படுதல் வேண்டும்.

(2) கூட்டுத்தாபனத்தின் ஆனத்தைப் புனரமைக்கும் அபிவிருத்தி செய்யும் அல்லது மேம்படுத்தும் நோக்கத்திற்கு ஏதேனும் பெறுமானத்தேய்வு நிதியத்தை அல்லது கடனாழ் நிதியத்தைக் கூட்டுத்தாபனம் தாபிக்கலாம்.

(3) இச்சட்டத்தின்கீழ் கூட்டுத்தாபனத்தின் தத்துவங்களையும் கடமைகளையும் பணிகளையும் பிரயோகிப்பதிலும் புரிவதிலும் நிறைவேற்றுவதிலும் கூட்டுத்தாபனத்தால் உறப்படும் ஏதேனும் செலவினம் நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்.

கணக்குகளின் கணக்காய்வு.

**9.** (1) கூட்டுத்தாபனத்தின் நிதியாண்டு பஞ்சாங்க ஆண்டாக விருத்தல் வேண்டும்.

(2) கூட்டுத்தாபனமானது, கூட்டுத்தாபனத்தின் வருமானம் மற்றும் செலவினம், சொத்துக்களும் பொறுப்புக்களும் அத்துடன் மற்றெல்லாக் கொடுக்கல் வாங்கல்கள் பற்றிய முறையான கணக்குகளை வைத்திருக்கச் செய்வித்தல் வேண்டும்.

(3) கூட்டுத்தாபனத்தின் கணக்குகள் சபையினால் நியமிக்கப்பட்ட ஒரு தகைமைபெற்ற கணக்காய்வாளரினால் கணக்காய்வு செய்யப்படல் வேண்டும். இவர் இலங்கைப் பட்டயக் கணக்காளர் நிறுவகத்தில் இணையுறுப்பினர் ஒருவராகவும் அந்நோக்கத்திற்கென கூட்டுத்தாபனத்தால் நியமிக்கப்பட்டவராகவும் இருத்தல் வேண்டும்.

*கூட்டுத்தாபனம் அசைவுள்ளதும் அசைவற்றதுமான ஆதனத்தை வைத்திருக்கலாம்.*

**10.** கூட்டுத்தாபனம் ஏதேனும் கொள்வனவு, மானியக்கொடை, கொடை, இறுதிவிருப்பாவணக் கையளிப்பு என்பதன் பயனைக் கொண்டு அல்லது வேறு வகையில் அதற்குரித்தாக்கப்படும் அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனம் எதனையும் எடுக்கவும் வைத்திருக்கவும் சட்டத்தில் இயலுமானதாதலும் ஆற்றல் உடையதாதலும் வேண்டுமென்பதுடன், அத்தகைய ஆதனம் யாவும் இச்சட்டத்தின் நோக்கங்களுக்காகவும் 7 ஆம் பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்கமையவும் அவற்றை விற்க, ஈடுவைக்க, குத்தகைக்குக் கொடுக்க, கொடுத்து மாற்ற அல்லது வேறு வகையில் கையுதிர்க்கவுள்ள முழுத் தத்துவத்துடனும் கூட்டுத்தாபனத்தினால் வைத்திருக்கப்படுதலும் வேண்டும்.

*சங்கத்தினால் செலுத்தப்படற்பாலனவையும் சங்கத்திற்குச் செலுத்தப்படற்பாலவையுமான தனிசுகள்.*

**11.** இச்சட்டம் தொடங்கும் திகதிக்கு முந்திய நாளன்றுள்ள சங்கத்தின் எல்லாத் தனிசுகளும் பொறுப்புக்களும் இத்தால் அமைத்துருவாக்கப்படும் கூட்டுத்தாபனத்தால் செலுத்தப்படுதல் வேண்டுமென்பதுடன், அந்நாளன்று சங்கத்திற்கு வருமதியாகவுள்ள எல்லாத் தனிசுகளும் ஒப்பப்பணங்களும், உதவுதொகைகளும் இச்சட்டத்தின் நோக்கத்திற்காகக் கூட்டுத்தாபனத்திற்குச் செலுத்தப்படுதலும் வேண்டும்.

*கலைக்கப்படுவதன் மீது எஞ்சியுள்ள ஆதனம்.*

**12.** கூட்டுத்தாபனம் கலைக்கப்பட்டதன்மீது அதன் எல்லாக் கடன்களையும் பொறுப்புக்களையும் கொடுத்துத் தீர்த்த பின்னர் ஏதேனும் ஆதனம் எஞ்சியிருப்பின் அத்தகைய ஆதனம் கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களிடையே பகிர்ந்தளிக்கப்படுதலாகாது. ஆனால், அது கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை ஒத்த குறிக்கோள்களைக் கொண்டதும், அதன் அல்லது அவற்றின் உறுப்பினர்களிடையே ஏதேனும் வருமானத்தை அல்லது இலாபத்தைப் பகிர்ந்தளித்தலை அதன் அல்லது அவற்றின் விதிகளின்மூலம் தடைசெய்கின்றதுமான அல்லது தடை செய்கின்றனவான கழகத்திற்கு அல்லது கழகங்களுக்குக் கொடுக்கப்படுதல் அல்லது மாற்றப்படுதல் வேண்டும்.

*கூட்டுத்தாபனத்தின் பணங்களையும் ஆதனத்தையும் பிரயோகித்தல்.*

**13.** கூட்டுத்தாபனத்தின் பணங்களும் ஆதனமும் அவை எவ்வாறு பெறப்பட்டிருப்பினும் சரி, இதன்கண் தரப்பட்டுள்ள குறிக்கோள்களை மேம்படுத்துவதற்கு மட்டுமே பயன்படுத்தப்படுதல் வேண்டுமென்பதுடன், அதன் பகுதி எதுவும் பங்கிலாபம் அல்லது இலாபங்கள் என்ற வகையில் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களுக்குச் செலுத்தப்படுதலோ, மாற்றப்படுதலோ ஆகாது.

*உறுப்பினர்களின் பொறுப்பின வரையறை.*

***14.*** கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர் எவரும் கூட்டுத்தாபனத்தின் தனிசுகளை அல்லது பொறுப்புக்களை கொடுத்துத் தீர்க்கும் நோக்கத்திற்காக அல்லது வேறேதேனும் நோக்கத்திற்காக, கூட்டுத்தாபனத்துக்கு அவரிடமிருந்து வருமதியாக இருக்கக் கூடிய அத்தகைய உறுப்பாண்மைக் கட்டணத் தொகையை விஞ்சிய ஏதேனும் உதவுதொகையை செலுத்துவதற்கு ஆளாதலாகாது.

*கூட்டுத்தாபனத்தின் இலச்சினை.*

***15.*** (1) கூட்டுத்தாபனத்தின் இலச்சினையானது செயலாளரின் கட்டுக்காப்பில் இருத்தல் வேண்டும் என்பதுடன் குழுவால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய முறையில் மாற்றவும் படலாம்.

(2) கூட்டுத்தாபனத்தின் இலச்சினை தலைவரினதும் பொதுச் செயலாளரினதும் முன்னிலையிலன்றி எத்தகையதுமான சாதனம் எதிலும் பொறிக்கப்படுதலாகாதென்பதுடன், அவர்கள் தாங்கள் சமுகமாயிருந்தமைக்கு அடையாளமாக அச்சாதனத்தில் அவர்களது பெயர்களை எழுதி கையொப்பமிடுதல் வேண்டும். அவ்வாறு கையொப்பமிடுதலானது எவரேனுமாள் சாட்சி ஒருவராக ஒப்பமிடுவதினின்றும் தனி வேறானாதாதலும் வேண்டும்.

*குடியரசினதும் மறுபேரினதும் உரிமைகளைப் பேணுதல்.*

***16.*** இச்சட்டத்தில் அடங்கியுள்ளதெதுவும் குடியரசின் உரிமைகளையேனும், ஏதேனும் அரசியல் அல்லது கூட்டிணைக்கப்பட்ட குழுவின் உரிமைகளையேனும், பங்கப்படுத்தலோ அல்லது பாதித்தலோ ஆகாது.

*ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

***17.*** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும்பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 : ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. 163, கிருலபனை மாவத்தை, பொல்ஹேன்கொடை, கொழும்பு 05 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்